*3*

# ஒரு வேற்றுமை மற்றும் ஒரு முடிவுரையான வாழ்த்துரை

## (17–25)

*அவருடைய நிருபம் அதன் முடிவுக்கு வருகிற நிலையில், யூதா கள்ளப் போதகர்களோடு கிறிஸ்தவ சிறப்புத்தன்மையை வேற்றுமைப்படுத்திக் காட்டுகிறார். கிறிஸ்தவர்கள் தேவனோடு தங்களுக்குள்ள உறவுமுறைக்கு பொறுப்பேற்க வேண்டியவர்களாயிருந்தனர். அவர்கள் அப்போஸ்தலருடைய வார்த்தைகளை நினைவில் வைத்து தங்களை மிகவும் அதிமான பரிசுத்த விசுவாசத்தில் கட்டியெழுப்ப வேண்டியவர்களாயிருந்தனர். அதே வேளையில் அவர்கள் ஆவிக்குரிய ரீதியில் பெலவீனமாயிருப்பவர்களையும் கவனம் செலுத்த வேண்டியவர்களாயிருந்தனர். அவர்களை உற்சாகப்படுத்தி கர்த்தருக்காக அவர்களை சீர்ப்படுத்த வேண்டியவர்களாக இருந்தனர்.*

## ஒரு வேற்றுமை: பிரிவினைவாத பரியாசக்காரர்களும் எதிர் நிலையில் உண்மையுள்ள விசுவாசிகளும் *(17-23)*

***17**நீங்களோ பிரியமானவர்களே, நம்முடைய கர்த்தராகிய இயேசு
கிறிஸ்துவின் அப்போஸ்தலரால் முன் சொல்லப்பட்ட வார்த்தைகளை
நினைவுகூருங்கள். **18**கடைசிக் காலத்திலே தங்கள் துன்மார்க்கமான
இச்சைகளின்படி நடக்கிற பரியாசக்காரர் தோன்றுவார்கள் என்று
உங்களுக்குச் சொன்னார்களே. **19**இவர்கள் பிரிந்து போகிறவர்களும்,
ஜென்ம சுபாவத்தாரும், ஆவியில்லாதவர்களுமாமே. **20**நீங்களோ பிரியம
ானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின் மேல் உங்களை
உறுதிப்படுத்திக்கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணி,
**21**தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு,
நித்திய ஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசு
கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக் காத்திருங்கள். **22**அல்லாமலும்,
நீங்கள் பகுத்தறிவுள்ளவர்களாயிருந்து, சிலருக்கு இரக்கம் பாராட்டி, சிலரை
அக்கினியிலிருந்து இழுத்துவிட்டு, பயத்தோடே இரட்சித்து, **23**மாம்சத்தால்
கறைபட்டிருக்கிற வஸ்திரத்தையும் வெறுத்துத் தள்ளுங்கள்.***

***வசனம் 17.** யூதா வசனம் 3ல் செய்தபடி தனது வாசகர்களுக்கு நேரடியாகப் பேசத் திரும்புகிறார், "விசுவாசத்திற்காக தைரியமாய் போராடுங்கள்" என்று அவர் அறிவுறுத்தினதற்கும் (வசனம் 3) கிறிஸ்து தமது அப்போஸ்தலர்கள் மூலம் கொடுத்த **வார்த்தைகளை நினைவுகூரும்படிக்***

*கேட்டுக் கொண்டதற்குமிடையே, சபை எதிர் கொண்டிருந்த கள்ளப் போதகர்களைக் குறித்து யூதா விவரித்தார். ஆசிரியரின் நோக்கம் தனது வாசகர்களை கட்டியெழுப்பி அவர்களை ஊக்கப்படுத்துவது தான் என்பது தெளிவு. அவர்களுடைய "பொதுவான இரட்சிப்பைக்" குறித்து எழுதுவதன் மூலம் அவர்களைக் கட்டியெழுப்ப ஆரம்பத்திலேயே நினைத்தார் (வசனம் 3), ஆகிலும் அவர்களுக்கு "பக்க வழியாய் நுழைந்த" கள்ளப் போதகர்களைக் குறித்து எச்சரித்து கள்ளப்போதகர்களிடமிருந்து அவர்களைத் திரும்ப செய்ய வேண்டும் என நினைத்து எழுத கட்டாயப்படுத்தப்படுவதை உணர்ந்தார். (வசனம் 4). அவர்களுடைய "பொதுவான இரட்சிப்பைக்" குறித்து எழுதினாரோ அல்லது கள்ளப் போதகர்களைக் குறித்து எழுதினாரோ, யூதாவின் நோக்கம் கிறிஸ்தவர்களை அவர்களுடைய விசுவாசத்திலே கட்டியெழுப்புவதாக இருந்தது.*

*யூதா அதைத் தெளிவாக்கி அவர்களுக்குள்ளாகவே எழும்பிச் சிலர் கிறிஸ்துவின் போதனைகளை புரட்டுகிற தேவபக்தியற்றவர்களாயிருப்பார்கள் என்பது குறித்து ஆச்சரியப்படவேண்டாம் என்று சொன்னார். பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் தேவனுடைய ஜனங்களை தங்கள் வசப்படுத்தி தங்களுடைய சுய அநுகூலத்திற்காக பயன்படுத்தினவர்களின் கதையை மறுபடியும் மறுபடியும் சொல்லுகிறது. கிறிஸ்துவின் சரீரத்தை தங்களுடைய சொந்த தேவைகளுக்குப் பயன்படுத்தி தங்களுக்கென மகிமையைத் தேடிக் கொள்வோர் எப்பொழுதும் இருப்பார்கள். யூதா தனது கருத்தை வலியுறுத்தி* ***அப்போஸ்தலர்கள்*** *இந்தக் காரியங்களைக் குறித்து* ***முன்பே சொல்லியிருக்கிறார்கள்*** *என்றார். பேதுருவைப் போலவே (2 பேதுரு 3:15, 16), பவுலின் நிருபங்களைச் சுட்டிக் காட்டுவதற்குப் பதிலாக, யூதா எல்லா போதனைகளும் எல்லா "அப்போஸ்தலர்களுக்கும்" பொதுவானது என்றார்.*

***கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின்*** *"அப்போஸ்தலர்கள்" என்று யூதா குறிப்பிட்ட போது அவர் தன் மனதில் யாரை நினைத்திருந்தார் என்பது நிச்சயமாகத் தெரியவில்லை. அவர் இயேசுவின் சகோதரர்களில் ஒருவனாக இருந்தபடியால், யூதா பன்னிருவருடன் நெருங்கின பழக்கமுடையவராக இருந்திருக்கக் கூடும் என ஒருவர் எதிர் பார்க்கலாம். யூதாவின் சகோதரனாகிய யாக்கோபை, ஒருவகையில் "அப்போஸ்தலன்" என்று பவுல் அழைத்தார் (கலாத்தியர் 1:19). யூதா யாக்கோபையும் தன்னையும் அப்போஸ்தலருடன் சேர்த்துக் கொண்டாரா? லூக்கா பவுலையும் பர்னபாவையும் இரண்டு முறை "அப்போஸ்தலர்கள்" என்று சொல்லியிருக்கிறார் (நடபடிகள் 14:4, 14), அவர்கள் அந்தியோகியா சபையால் அப்போஸ்தலர்களாக அனுப்பப்பட்டவர்கள் என்ற பொருளில் சொல்லியிருக்கலாம். கர்த்தரால் நேரடியாக அப்போஸ்தல அதிகாரத்தைப் பெற்றவர்களோடு யூதா மற்றவர்களையும் உட்படுத்திப் பேசினாரா என்பது தெளிவாக்கப்படவில்லை. எண்ணிக்கையுள்ளவர்களில் ஒருவனாகத் தன்னை நினைத்துக் கொள்ளாமல் இருந்தாலும் அப்போஸ்தலருடைய செய்திகளை அடுத்தவர்களுக்கு கொண்டு செல்வதால் தன்னை அப்போஸ்தலன் என்று கருதினார் என்பது தெளிவாயிருக்கிறது.*

*"அப்போஸ்தலர்கள் தான்" கிறிஸ்தவ உபதேசங்களுக்கான அதிகாரமுடைய மூல ஆதாரமாக இருந்தார்கள் என்பது தான் யூதாவின்*

ஆரம்பக் கருத்தாக இருந்தது. ஒரு அதிகாரம் பெற்ற போதகர்களாக அவர்களின் தொகை குறைந்தபட்சம் பன்னிரெண்டு பவுல் (1 கொரிந்தியர் 15:5-9). பன்னிருவரில் பெரும்பாலானோரின் ஊழியங்கள் மிகக் குறைவாக நமக்குத் தெரிந்திருக்கிறது. அவர்களில் ஒவ்வொருவரும் தொலை தூர அணுகுமுறையில் விஸ்தரிப்பு ஊழியங்களைச் செய்து வந்தனர்; ஆனால் தற்போதைக்கு, யூதாவின் கவனம் பிற விஷயங்களில் திரும்பியுள்ளது. கர்த்தருடைய சகோதரன் ஒரு அப்போஸ்தலிக செய்தி உள்ளதென்று அவனுடைய வாசகர்கள் அறிந்து கொள்ள வேண்டுமென்று விரும்பினார். யூதா எதிர்கொண்ட கள்ளப் போதகர்கள் அப்போஸ்தல செய்தியின் அடிப்படைக் கொள்கைகளை மறுத்துக் கொண்டிருந்தார்கள். அதனால், விசுவாசிகளின் இரட்சிப்பு ஆபத்தில் இருந்தது. சபை விசுவாசிப்பது முக்கியத்துவம் வாய்ந்தது. உபதேசம் இன்றியமையாததாய் இருக்கிறது.

**வசனம் 18. அவர்கள் உங்களுக்குச் சொன்னார்களே** என்று யூதா எழுதும்போதும் அப்போஸ்தலர்களே இன்னும் கவனத்தில் இருந்தனர். கிறிஸ்துவின் அப்போஸ்தலர்கள் கள்ளப் போதகர்களைக் குறித்து எச்சரித்திருந்தார்கள். கள்ளப் போதகர்கள் கிறிஸ்தவ உபதேசத்தோடு தங்களுடைய போதனையை ஒத்துப் போகப் பண்ணி ஒழுங்கீன செயல்களுக்குச் செல்ல விருப்பமாய் இருந்தது கண்டு யூதாவின் வாசகர்கள் ஆச்சரியமடைந்திருக்கக் கூடாது. அப்படித்தான் இருக்கும் என்று அப்போஸ்தலர்கள் கிறிஸ்தவர்களுக்குப் போதித்திருந்தார்கள்.

யூதா அப்போஸ்தலர்களால் கொடுக்கப்பட்ட குறிப்பான எச்சரிக்கைகளை மேற்கோள் காட்டி பேசவில்லை. மாறாக, புதிய ஏற்பாட்டில் அநேகருடைய எச்சரிக்கைகள் கொடுக்கப்பட்டுள்ளன. "கடைசி நாட்களில் தோன்றும்" கள்ளப் போதகர்களைக் குறித்து பவுல் எச்சரித்தார் (2 தீமோத்தேயு 3:1-5; காண்க நடபடிகள் 20:29, 30; 1 தீமோத்தேயு 4:1-3), மேலும் யூதாவில் சொல்லப்பட்டதற்கு சமமான வார்த்தைகளால் அவர் விவரித்தார். பெந்தெகோஸ்தே நாளுக்குப் பின்பு இருபது வருஷங்களுக்குள் யூதா இந்த நிருபத்தை எழுதியிருந்தால், புதிய ஏற்பாட்டின் சில பதிவேடுகளை அவர் அறிந்திருக்கக் கூடும். இருப்பினும், எருசலேமிலிருந்த அப்போஸ்தலர்கள் இதற்கொத்த அநேக எச்சரிக்கைகளை கொடுத்தார்கள் என்பது சற்று சந்தேகமாக இருக்கிறது. பேதுருவின் வார்த்தைகள் யூதாவின் வார்த்தைகளுக்கு மிகவும் ஒத்திருக்கின்றன: "முதலாவது நீங்கள் அறிய வேண்டியது என்னவெனில்; கடைசி நாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுய இச்சைகளின்படியே நடந்து" (2 பேதுரு 3:3).

பரியாசக்காரர் என்பதன் கிரேக்க வார்த்தை (*empaiktes*) 2 பேதுரு 3:3 மற்றும் யூதா 18 ஆகிய வசனங்களில் மட்டுமே புதிய ஏற்பாட்டில் காணப்படுகிறது. காரணமும் உண்மையும் தோற்றுப் போகும்போது, பக்தியற்றவர்களின் கையில் பரியாசம் என்பது தயாராக இருக்கும் கனமான தடியாக இருக்கிறது. உலக ரீதியான ஞானம் என்ற பெயரைக் கொண்டிருப்போருக்கு சூழ்ச்சியுடன் கூடிய அனுமானம், பரியாசம் மற்றும் தந்திரமான எதிர்ச்செயல்கள் தானாக வரும். NASB வேதாகமம் கள்ளப் போதகர்களுக்கு "தேவபக்தியற்ற" எனும் வார்த்தையைப் பயன்படுத்துகிறது, அது கள்ளப் போதகர்களைக் குறிப்பிட்டு வசனம் 15ல் நான்கு முறை சொல்லப்படுகிறது. இந்த வசனத்தில் யூதா

*மறுபடியும் அவர்களின் சொந்த துன்மார்க்கமான இச்சைகளின்படி நடப்பதை மனதிற்குக் கொண்டுவருகிறார். அவர்களுடைய பக்தியற்ற தன்மைக்கு குரல் கொடுக்காமல் அவர் அந்தப் போதகர்களை குறிப்பிட இயலாததாக காணப்படுகிறது.*

*பவுல் "கடைசி நாட்களில்" என்ற வார்த்தையைத் தெரிந்து கொண்ட நிலையில், யூதா எழுதின **"கடைசி காலத்திலே"** என்னும் வார்த்தையைக் காட்டிலும் வித்தியாசமான வேறெதையும் மனதில் வைத்து எழுதவில்லை. "கடைசி காலம்" என்பது யூதாவும் அவருடைய வாசகர்களும் வாழ்ந்த காலத்தைக் குறிப்பிடுகிறார். (காண்க எபிரெயர் 1:2, அங்கேயும் "கடைசி நாட்கள்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.) அவர்கள் கடைசி காலத்தில் வாழ்கிறார்கள் என்பதற்கு ஆதாரமாக, யூதா தனது வாசகர்களின் அனுபவங்களைப் பயன்படுத்தி, "பரியாசக்காரர்களைக்" குறித்த தீர்க்கதரிசனம் நிறைவேறியிருப்பதையும், அவர்களுடைய தோற்றம் "அவர்களின் தேவ பக்தியற்ற சுய இச்சைகளின்படி நடப்பதையும்" சுட்டிக் காட்டினார் (காண்க 1 தீமோத்தேயு 4:1). யூதாவின் வாசகர்கள் கடந்த கால நிகழ்வுகளினால் வருகிற எச்சரிக்கைகளை நினைவுகூர வேண்டியது அவசியமாயிற்று, அப்போஸ்தலிக எச்சரிக்கைகள் கள்ளத் தீர்க்கதரிசிகளுடன் ஏற்ற வகையில் நடந்துகொள்ள வேண்டிய வலிமையைக் கொடுக்கும்.*

***வசனம் 19.*** *யூதா தெளிவாக்கினார்; எந்த விதத்திலும் தவறாக புரிந்து கொள்ளுதல் இடம் பெற சாத்தியக் கூறுகள் இருக்கக் கூடாது என்று விரும்பினார். யூதா தனது நிருபத்தை எழுதின சபையார்களை தங்கள் வசப்படுத்திக்கொள்ள எத்தனித்த (கள்ளப்) போதகர்களைக் குறிப்பிட்டு அப்போஸ்தலர்களின் தீர்க்கதரிசனங்கள் பேசின. இவர்கள் என்று யூதா பயன்படுத்தின சொற்றொடரில் அவருடைய இகழ்ச்சி வெளிப்படுகிறது. அதை அவர் திரும்பத்திரும்ப பயன்படுத்தியிருக்கிறார் (வசனங்கள் 10, 12, 16). அதே போல, கள்ளத் தீர்க்கதரிசிகள் தங்களுடைய போதனைகளை எதிர்த்து நின்றவர்களை தங்களுடைய போதனைகள் ஜென்ம சுபாவத்துக்குரியது என்று பேசியது குறித்து இகழ்ந்தார்கள். ஒருவகையில் அவர்கள் தங்களுக்கு சிறப்பான ஆவிக்குரிய வெளிப்பாடுகள் இருப்பதாகச் சொல்லிக் கொண்டார்கள். யூதா குறிப்பிடுகையில் துல்லியாக இதற்கு நேர் எதிர் காரியமே உண்மை என்பதைச் சொன்னார். கள்ளப் போதகர்கள் "ஜென்ம சுபாவத்தினர்களாய்" (psuchikos) இருந்தனர். ஆவியில்லாதவர்களாய் இருந்தவர்கள் அவர்களே, "ஜென்ம - சுபாவத்தினர்" என்பதை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பது கடினம். அதன் பொருள் என்னவெனில் அவர்களுடைய மனமும் இருதயமும் முற்றிலும் தங்களுடைய சுய இச்சைகளினால் நிரப்பப்பட்டு மிருகங்கள் மன நிறைவு பெறுவது போன்றேயன்றி வேறெதுவுமில்லை, என்பதை அவர்களே கண்டுபிடிக்க இயலும்.*[1]

*கள்ளப் போதகர்கள்தான் **பிரிந்து போகிறவர்களுமாய்** இருந்தனர். கிறிஸ்துவின் சரீரத்தில் ஏற்படும் பிரிவினைகளுக்கான அடிப்படை மூல ஆதாரத்தை பாரம்பரியத்துக்கே அந்நியமான போதனைகளை கைக்கொள்ளுதல்களையும் ஆரம்ப காலத்தில் பெற்றுக் கொண்டது தான் என்று யூதா புரிந்து கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அப்போஸ்தலர்களின் உபதேசங்களைப் பின்பற்றின யூதாவும் மற்றவர்களும்*

பிரிவினைகளுக்கு மூல ஆதாரமல்ல. எண்ணற்ற சம்பவங்களின் போது, கிறிஸ்துவின் சரீரத்திற்குள் ஜனங்கள் புதுமையான உபதேசங்களைப் புகுத்தியிருந்தனர். விசுவாசமுள்ளவர்கள் எதிர்ப்புத் தெரிவித்தபோது, நூதன போதனையாளர்கள்தான் பிரிவினைகளை ஏற்படுத்துபவர்கள் என்றனர். புதிய, நூதன மற்றும் முற்போக்கானவைகள் எப்போதுமே சிறந்வைகளல்ல. புதிய போதகர்களின் வருகையால் யூதா குறிப்பிட்டு எழுதின சபைகள் சிறப்பாக முன்னேறியிருக்க வில்லை. புதியாய் வந்தவர்களே பிரிவினைக்குக் காரணிகளாயிருந்தனர். அவர்கள்தான் சரீரத்தை பிளவு உண்டாக்கி எதிர்ப்புத் தெரிவிக்கும் மன வெறுப்புக்குக் காரணமானார்கள்.

***வசனம் 20.*** கிறிஸ்தவர்கள் தங்களுடைய சுய ஆவிக்குரிய நலனுக்கு பொறுப்பைக் கொண்டிருக்கிறார்கள். யூதா தன் வாசகர்களுக்கு அவர் நினைப்பூட்டி அவர்கள் தங்களை [தாங்களே] கட்டியெவுப்ப வேண்டியவர்கள் என்றார். அது தேவன் அவர்களை தங்கள் சுய யூகங்களிலே செயல்படும்படி விட்டுவிட்டார் என்று பொருளல்ல. தேவ சமுதாயத்தின் ஆவிக்குரிய போஷாக்குக்கு வேண்டிய மூல ஆதாரம் மகா பரிசுத்தமான விசுவாசம். விசுவாசத்தின் பொருள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து. கூடுதலாக, “மகா பரிசுத்தமான விசுவாசம்” கிறிஸ்துவைக் குறித்து தமது அப்போஸ்தலர்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டவைகளை சூழ்ந்து கொள்ளும். விசுவாசத்தைக் கொடுக்க ஏதுவாயிருந்த கருவி அப்போஸ்தலர்கள் மூலம் கிரியை செய்த பரிசுத்த ஆவியானவர். மேலும் பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்குள் வாசம் பண்ணி அவரை பாவத்திலிருந்து திரும்பி கிறிஸ்துவிலே உறுதிப்பட்ட நம்பிக்கை வைக்க உதவுகிறது. இப்படியிருக்கிறபடியால், யூதா தனது வாசகர்களை பரிசுத்த ஆவிக்குள் ஜெபம் பண்ணும்படி அறிவுறுத்தி அதுவே ஆவிக்குரிய வளரச்சிக்கு அவர்கள் தேட வேண்டிய சரியான கருவி என்றார்.

***வசனம் 21.*** தனது நிருபம் முடிவை நெருங்கி வரும் நிலையில், யூதா கிறிஸ்தவர்கள் உத்திரவாதம் கொடுக்க வேண்டிய முக்கியத்துவம் பற்றி தனது வாசகர்களுக்கு நினைப்பூட்டினார். அவர்கள் கள்ளப் போதகங்களுக்கு எதிர்த்து நிற்பதும் அப்போஸ்தல விசுவாசத்திலே அவர்கள் உறுதியாய் நிற்பதும் அவர்களுடைய விசுவாசத்தின் விளைவை உறுதிப்படுத்தலையும் அவர்களுடைய நம்பிக்கையின் முடிவையும் தீர்மானிக்கும். அது “பரிசுத்தவான்களுக்கு ஒருமுறை ஒப்புக்கொடுத்த விசுவாசத்தில்” உறுதியாய் நிற்பது (வசனம் 3) என்பது அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தில் பங்குள்ளவர்களாக வாழ்பவர்கள் என்பதாகும்.

தேவனுடைய ராஜ்யத்தையோ “மகா பரிசுத்த விசுவாசத்தையோ” ஒன்றில்லாமல் ஒன்றைப் பேச இயலாது. அவைகள் இரண்டும் துல்லியமாக ஒன்றாக இராவிட்டாலும், குறைந்த பட்சம் ஒன்றுக்கொன்று சார்ந்திருக்கின்றன. இயேசுவின் ஊழியகாலத்தில் ராஜ்யம் இருந்தது என்று சொல்லுவதில் அர்த்தம் இருந்தது (மத்தேயு 12:28), மற்றும் அதே போல ராஜ்யம் இனிமேல் தான் வரும் என்று (அப்பொழுது) போதிக்கப்பட்டதிலும் அர்த்தம் இருந்தது (மாற்கு 9:1). இயேசுவின் வாழ்வும் போதனையும் ராஜ்யத்தின் கதவைத் திறந்தன, ஆகிலும் அவருடைய மரணம், உயிர்த்தெழுதல் மற்றும் பரமேறிச் செல்லுதலுக்குப் பின்பே ராஜ்யத்தின் வருகை உணரப்பட்டது. பெந்தெகோஸ்தே நாளிலே பேதுரு சுவிசேஷத்தை

அறிவித்தபோது ஜனங்கள் பதில் செயலாக மனந்திரும்பி ஞானஸ்நானம் பண்ணப்பட்ட போது இராஜ்யம் வந்ததாக சொல்வதில் முக்கியமான பொருள் இருக்கிறது (நடபடிகள் 2:37-42). அதினால் பவுல் கிறிஸ்து நம்மை விடுதலையாக்கி தேவன் தமது குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினார் (கொலோசெயர் 1:13), என்று சொல்ல முடிந்தது.

கிறிஸ்தவர்கள் இந்த வாழ்க்கையிலேயே தேவனுடைய ராஜ்யத்தில் பங்கேற்கக் கூடியவர்களாயிருந்த போதிலும், ராஜ்யத்திற்காக அவர்கள் காத்திருக்கிறார்கள் என்று சொல்லுவதிலும் அர்த்தமிருக்கிறது. யூதா **காத்திருங்கள்** என்பதிலே கவனத்தைத் திருப்புகிறார். தேவனுக்காக காத்திருத்தல், அவர்தம் குறிப்பிட்ட காலக் கட்டத்தில், தமது சித்தத்தைக் கொடுக்க காத்துக் கொண்டிருத்தல் என்பது தேவனுடைய ஜனங்களில் அநேகருக்கு இது ஒரு கடும் சோதனையான அநுபவமாகும். சங்கீதக்காரர்களில் சிலர் ஆவிக்குரிய ஏக்கங்களின் உச்சியை அடைந்துள்ளனர், அது யூதாவின் உணர்ச்சிகரமான கருத்திலிருந்து வித்தியாசப்பட்டதல்ல. உதாரணமாக, "கர்த்தருக்குக் காத்திரு; அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார்; திட மனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு" (சங்கீதம் 27:14) என்று வாசிக்கிறோம். "நம்முடைய ஆத்துமா கர்த்தருக்குக் காத்திருக்கிறது; அவரே நமக்குத் துணையும் நமக்குக் கேடாகமுமானவர்" என்றும் வாசிக்கிறோம் (சங்கீதம் 33:20). யூதாவைப்போல, பவுலும், ஏதோ ஒன்றுக்காக காத்திருக்க வேண்டியதை தெளிவாக்கினார். "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தை சுதந்தரிக்கமாட்டாது," என்று சொன்னார் (1 கொரிந்தியர் 15:50). மரணத்தின் இந்தப் பக்கத்திலே, கிறிஸ்தவர்கள் மாம்சத்தோடும் இரத்தத்தோடும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இந்த - மாம்சத்திலும் -இரத்தத்திலும் தரித்திருக்கிறது விசுவாசிகளின் நிலையை அடையாளப்படுத்தும்போது, அவர்கள் எதிர்நோக்கிக் காத்திருக்க ஒன்று உள்ளது. யூதா சொன்ன காரியம் மிகப் பலமான ஓர் ஆவலை மனதில் வைத்துப் பேசுவது போல் காணுகிறது, அவர் கிறிஸ்துவுக்குச் சொந்தமானவர்கள் இரக்கத்தைப் பெற **ஆவலுடன் காத்திருக்கிறார்கள்** என்று சொன்னார் (காண்க 2 தீமோத்தேயு 4:8).

ஏற்கனவே கொண்டுள்ளதும் இன்னமும் காத்திருக்கக் கூடியதுமான இந்தப் பதட்டம் ராஜ்யத்தை சுதந்தரிப்பதைக் குறித்து வெளிப்படுத்துவது மாத்திரமல்ல, ஆனால் நித்திய ஜீவனை உணரத்தக்க ஒரு பகுதியாகவும் அது காணப்படுகிறது. கிறிஸ்துவுக்குள் நித்திய ஜீவன் தொடங்கியிருக்கிறது, ஆகிலும் தற்போதைக்கு விசுவாசமாயிருப்பதே காரியம். பின்னதாக, கிறிஸ்து வெளிப்படும் போது, கடைசி எக்காளம் தொனிக்கும் போது (1 கொரிந்தியர் 15:52), நாம் மறுரூபமாகுவோம். மாம்சமும் - இரத்தமுமாகிய அழிவுள்ளதாகிய இது அழியாமையைத் தரித்துக்கொள்ளும். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரக்கத்தின்படி தற்காலிகமானதும் கடந்து போகிறதுமான இந்த உலகம் அழிவில்லாமையால் விழுங்கப்படும். கிறிஸ்தவர்கள் "ஜீவனுக்காக" ஏங்கும் போது, அதனுடைய முடிவில்லாத இயல்பை அவர்கள் தவறாக எடுத்துக் கொள்வதில்லை. காலமளவு நிர்ணயிக்கப்படாத இயல்பு "நித்தியம்" (*aiōnios*) எனும் வார்த்தையால் அழைக்கப்படுகிறது. இருந்தாலும், வார்த்தை வாழ்க்கையின் அளவைக்குறிப்பிட்டுப் பேசுவதில்லை - அது முடிவற்றது - அது

வாழ்க்கையின் தரத்தைக் குறிப்பது. அது வருங்காலத்திற்காக வாழ்க்கையை நிர்ணயிப்பது.2 "நித்திய ஜீவனுக்குரிய" நிறைவு இன்னும் வரக் கூடியது. அது கிறிஸ்துவுக்குள் இருப்பது என்பது ஏற்கனவே "நித்திய ஜீவனைப்" பற்றிக் கொண்டதாக இருக்கிறது.

பழைய ஏற்பாட்டில் குறிப்பாக, "ஜீவன்" என்பது நிலைத்திருக்கும் ஒரு தகுதியை தேவனோடு சமாதானம், ஞானம், மற்றும் ஆசீர்வாதங்களால் காட்டப்படுகிறது. மோசே இஸ்ரவேலர்களிடம். "இதோ, ஜீவனையும் நன்மையையும் மரணத்தையும் தீமையையும் இன்று உனக்கு முன்னே வைத்தேன்" (உபாகமம் 30:15), என்று சொன்னபோது, அவர் இஸ்ரவேலர்கள் கானானிலே பெற்றுக் கொள்ளப்போகிற வாழ்க்கையின் தரத்தை கவனிக்க வேண்டுமென்று குறிப்பிட்டார். அதே போல, இயேசு குறிப்பிடும்போது, "குமாரனும் தம்மில் தாமே ஜீவனுள்ளவராயிருக்கிறார்" (யோவான் 5:26) என்றார், அவர் தேவன் தமக்குக் கொடுத்த ஜீவனின் தனிப்பண்பைப்பற்றி பேசிக் கொண்டிருந்தார். இயேசுவால் அநுபவிக்கப்பட்ட அதே ஜீவனின் பண்பை அவருடைய ஜனங்களும் அநுபவிக்க விருக்கிறார்கள். "நித்திய ஜீவன்" இப்பொழுது இருக்கிறது, ஆனாலும் அது இன்னும் வரப் போகிறதாயுமிருக்கிறது. யூதா சொன்னது போல, நாம் அதற்காக "ஆவலோடே" காத்திருக்கிறோம்.

கிறிஸ்துவிலே பங்கேற்பவர்கள் இந்த உலகத்திலும் பங்கு பெறுகிற வாழ்க்கையின் பண்பு வருங்கால வாழ்க்கையையும் குறிப்பிடுவதாயிருக்கிறது. இயேசு, "குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனையுடையவனாயிருக்கிறான்," என்று சொன்னார் (யோவான் 3:36). அவர்கள் அதை இங்கே இப்பொழுதே பெற்றிருக்கிறார்கள். அவர் தொடர்ந்து, "என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்திய ஜீவன் உண்டு" என்றும் சொன்னார் (யோவான் 5:24). ஆவிக்குரிய மூலக்கூறுகள் (ஒருவர்) தேவனுடைய அன்பிலே [தன்னைக்] காத்துக் கொள்வது என்பது பரிசுத்தமான வாழ்க்கையை வாழ்வதையும் தேவனைப் பிரியப்படுத்தும் வழிகளில் அவரை ஆராதிப்பதும் சேவிப்பதையும் உட்படுத்தியது, கர்த்தருடைய மறுவருகையை ஒருவர் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கும் போது, அவர் தன்னை அன்பினாலே காத்துக்கொள்கிறார்.

**வசனங்கள் 22, 23.** ஒருவர் பெலவீனமாயிருப்பதினாலேயே, அவர் கள்ளப் போதகர்களின் மார்க்க விரோத செயல்களில் இழுப்புண்டு போவதினாலேயே, அவர் கிறிஸ்தவர்களால் புறந்தள்ளப்பட்டு மறக்கப்பட வேண்டும் என்று பொருளல்ல. விசுவாசமுள்ளவர்கள், **சந்தேகப்படுகிற சிலருக்கு, இரக்கங்காட்ட வேண்டும்.** தங்கள் சுய ஞானத்தை சார்ந்திருந்து, பிரிவினைகளை உண்டாக்கி, "தேவனுடைய கிருபையை காம விகாரத்துக் கேதுவாக புரட்டினவர்களுக்கு (வசனம் 4), யூதா கொண்டிருந்த நேரம் மிகக் கொஞ்சம்". ஆகிலும் சந்தேகப்படுகிற அனைவருமே தேவனுடைய ராஜ்யத்தை முற்றிலும் இழந்தவர்களல்ல. விசுவாசத்திலே மிகவும் இளமையாயிருந்த சிலர். அவர்களுடைய விசுவாசத்தில் சரியான நம்பிக்கையிலும், விசுவாசத்திலும் இரக்கத்திலும் முறையாக அமையவில்லை. அவர்களும், கூட, "சந்தேகப்படுகிறவர்களோடே" எண்ணப்பட்டவர்கள்தான். யூதா இரக்கத்தையும் பரிதாபத்தையும் அவர்கள்

*மீது காண்பிக்கும்படி விசுவாசத்தில் பலமுள்ளவர்களை அழைத்தார் விசுவாசமுள்ளவர்கள் சந்தேகப்படுகிறவர்களை மீண்டும் கர்த்தரிடமாய்த் திரும்பக் கொண்டு வர வேண்டியவர்களாய் இருந்தனர் (காண்க யாக்கோபு 5:20).*

*இந்த வசனங்களில் யூதா இரண்டு அல்லது மூன்று கூட்ட மக்களை தன் மனதில் வைத்து இந்த வசனங்கள் எழுதியிருப்பாரா என்று உறுதியாய்த் தெரியவில்லை, எழுத்தாளர் குறைந்த பட்சம் இரண்டு கூட்டாத்தாரை வித்தியாசப்படுத்திக் காண்பித்தார். வசனம் 22ல் சந்தேகப்படுகிறவர்களுடன் ஒப்பிட்டு,* ***மற்றவர்களை இரட்சித்து*** *என்று வசனம் 23ல் தொடர்ந்து எழுதினார். சந்தேகப்பட்டவர்களிலிருந்து "மற்றவர்கள்" வித்தியாசப்படுத்தப்பட வேண்டும் என்பதாக காணப்படுகிறது. யூதா ஒருவேளை மூன்று கூட்டத்தை வித்தியாசப்படுத்திக் காட்ட விரும்பியிருக்கலாம். (1) சந்தேகப்படும் சிலர் (2)* ***அக்கினியிலிருந்து இழுத்து விடப்படவேண்டிய*** *சிலர் (3) மற்றும் விசுவாசமுள்ளவர்கள்* ***இரக்கம் பாராட்ட வேண்டிய சிலர்.*** *பின்னதாகக் குறிப்பிட்ட இரண்டு கூட்ட ஜனங்கள் ஒன்றிணைந்த நெருக்கமான சூழல் இரண்டு கூட்ட மக்களை மட்டுமே யூதா குறிப்பிடுவதாக ஆலோசனையாகச் சொல்லுகிறது. இரண்டுக்குமிடையே கவிந்திருக்கவும் வழியுண்டு. எழுத்தாளர் மூன்று கூட்ட ஜனங்களுக்குமிடையே ஒரு கூரிய வித்தியாசத்தைக் காட்ட விரும்பினார் என்பது தகுதியல்ல. அக்கினியிலிருந்து இழுத்து விடப்படவேண்டியவர்களின் மத்தியில் சந்தேகப்படும் சிலர் இருந்திருக்க வேண்டும். "இரக்கம்" எனும் வார்த்தைதான் வசனங்கள் 22, 23 முழுவதும் செயல் விளைவுள்ள வார்த்தையாகும்.*

## *முடிவு வாழ்த்துரை (24, 25)*

***24 வழுவாதபடி உங்களைக் காக்கவும் தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே உங்களை மாசற்றவர்களாய் நிறுத்தவும் வல்லமையுள்ளவரும். 25 தாம் ஒருவரே ஞானமுள்ளவருமாகிய நம்முடைய இரட்சகரான தேவனுக்குக் கனமும் மகத்துவமும் வல்லமையும் அதிகாரமும் இப்பொழுதும் எப்பொழுதும் உண்டாவதாக, ஆமென்.***

***வசனம் 24.*** *அவருடைய நிருபம் குறுகிய ஒன்றாக இருந்தாலும் அதன் பாடக் கருத்து சற்று கடினமானதாக இன்றைய வாசகர்களுக்கு காணப்பட்டாலும், யூதா திருமறையிலே மிக அழகான வாழ்த்துரைகளில் ஒன்றை சொல்லி நிறைவு செய்கிறார். ஏற்கனவே யூதா விசுவாசியிடம் தன்னை உறுதிபடுத்திக்கொண்டு தேவனுடைய அன்பிலே காத்தி ருக்க அறிவுறுத்தினார். இப்பொழுது சரி நிகர் சமத்துவத்திற்கான தனிப்பட்ட பொறுப்புடன் தேவனுடைய கிருபையின் நிச்சயத்தையும் உறுதிப்படுத்துகிறார். இதிலே சந்தேகம் வேண்டாம். விசுவாசிக்கு அருகே நின்று பாதுகாத்து விழுந்து விடாதபடிக்கு அவரைத் தடுத்து நிறுத்துவார்.* ***கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தாமே உங்களை வழுவாதபடி காக்கிறவர்.*** *இந்த வார்த்தைகளில் விசுவாசியை உற்சாகப்படுத்த தகாத நம்பிக்கை இங்கே*

*கொடுக்கப்படவில்லை. விசுவாசத்தில் தரித்திருக்கும் பொறுப்பு என்பது விசுவாசியின் சொந்த தோள்களிலிருந்து எடுத்துப்போடப்படக்கூடாது உறுதிப்பட்ட நிச்சயம் என்னவெனில் கிறிஸ்துவில் தன்னுடைய விசுவாசத்தை வைத்து, தனது வழி நடத்துதலுக்காக தொடர்ந்து அவரை நோக்கிக் கொண்டிருப்பவனுக்கு, பாவத்திலிருந்து திரும்பி மனமாறுதலை அடைபவன் உறுதியாய்த் தரித்திருப்பான். தேவன் (அவனை)* ***தமது மகிமையுள்ள சந்நிதானத்திலே மிகுந்த மகிழ்ச்சியோடே மாசற்றவனாய் நிறுத்துவார்.***

***வசனம் 25. தேவனை இரட்சகராகப்*** *பேசி அதே வேளையில் அவரை நியாயாதிபதியாக நினைப்பதிலே யூதாவுக்குப் பிரச்சனை எதுவும் இருக்க வில்லை (வசனம் 4). தேவன் நியாயாதிபதியாக இருக்கிறார். இயேசுவும் கூட நியாயாதிபதியாக இருக்கிறார். வசனம் 15ன் போதனை அதுதான். தேவனையும்* ***இயேசு கிறிஸ்துவையும்*** *சமமாக வைக்கும் பதங்களைப் பயன்படுத்தி இருவரும் சமமாக மேன்மைபடுத்தப்படுகின்றனர். கிறிஸ்தவ விசுவாசமானது தெய்வத்தை மையம் வைத்தது. அது கிறிஸ்துவை மையம் வைத்தது. சகல அன்பும். சகல நன்மையும், சகல ஒழுக்கமும், சகல தொழுகையும், தேவனுடைய மகிமைக்கான சகலத்துதிகளும்,* ***கனமும், மகத்துவமும் வல்லமையும், அதிகாரமும்*** *அவருக்கே உரியது ஆமென்.*

## பயன்பாடு

### கர்த்தருக்கு காத்திருத்தல் (வசனம் 21)

*அநேக வருடங்களாக, ஆனி மே ஆல்ஸ்டன் லூயிஸ் டென்னிஸியின் மெம்பிஸில் உள்ள ஹார்டிங் மார்க்க பட்டபடிப்பு பல்கலைக்கழகத்தில் நூலக அதிகாரியாக பணியாற்றிக் கொண்டிருந்தாள். அவள் நூலகத்தை அதிகமாக நேசித்தாள், மற்றும் அவள் தனது வகுப்பில் பயன்ற மாணவர்களையும் நேசித்தாள். ஆனி மே தன்னுடைய மாணவர்கள் சங்கீதம் 130 ஐ அதிகமாய் நேசிக்கும்படி கற்றுக்கொடுத்தாள். அந்த சங்கீதத்தின் 6வது வசனம், "எப்பொழுது விடியும் என்று விடியக் காலத்துக்குக் காத்திருக்கிற ஜாமக்காரரைப் பார்க்கிலும் அதிகமாய் என் ஆத்துமா ஆண்டவருக்குக் காத்திருக்கிறது" என்று சொல்லுகிறது. சங்கீதம் 130 தனக்குப் பிடித்த சங்கீதங்களில் ஒன்று என்று சொல்லுவதில் அவள் வெட்கப்படவில்லை. ஆனி மே 2006 மார்ச் 9ந் தேதி இந்த உலகத்தை விட்டுப் பிரிந்தாள். அவளை சந்தித்திருந்தவர்கள் யாரும் அவ்வளவு சீக்கிரம் அவளை மறந்து விட முடியாது. நாம் நினைவில் வைத்திருப்போம், நாம் காத்திருப்போம். நாம் இன்னும் சற்று அதிக தீர்மானத்தோடேயும் பொறுமையுடனும் காத்திருந்தால் நாமும் ஒரு கூட்ட மக்களாக அவளுடனிருப்போம் ஏனெனில் அவள் சங்கீதம் 130 ஐ நமக்கும் சுட்டிக் காட்டியிருக்கிறாள்.*

*நான் ஒரு பொறுமையற்ற ஆத்துமா என்பதை நான் அறிக்கையிட வேண்டும். யாருக்காகவும் காத்திருப்பது என்பது எனக்குக் கடினமான காரியம். கர்த்தருக்குக் காத்திருப்பது என்பது எனக்கு மிகவும் கடினம். நான் காத்திருக்கும் பொழுது, நான் எதிர்பாராத வகையில் அவர்தம் நோக்கத்தை கொண்டு வருகிறார் என்பதை கண்டு பிடிக்கிறேன். நான் அட்டவணையிடாத வேளையில் அவைகளை அவர் கொண்டு வருகிறார். யூதாவைப்போல, நாம்*

*ஆவலோடே காத்திருக்கிறோம். எதிர் காலம் என்பது முற்றிலும் நிச்சயமற்றது. செய்ய வேண்டிய வேலை இருக்கிறது. நாம் நேசிக்கிற ஜனங்கள் இருக்கிறார்கள் மற்றும் நாம் அவர்களை மாற்ற வேண்டும். சகித்துக் கொள்ளப்பட வேண்டிய பாடுகள் உண்டு. வலி சமீபத்திருக்கிறது. நாம் பிரியாவிடை சொல்ல வேண்டியவர்கள் இருக்கிறார்கள். தேவனுடைய காலக் கீட்டின்படி சகலமும் வெளியரங்கமாகும். நாம் அவருடைய கரத்தில் நம்மை ஒப்புக் கொடுத்து, விட்டு ஆவலோடே காத்திருக்கிறோம்.*

*"ஆவலோடே காத்திருத்தல்" என்பது குறைந்த பட்சம் இரண்டு விதமாக விளக்கப்படுத்தப்படுகிறது. ஒருவர் ஆவலோடு கூடிய ஆசையாய்க் காத்திருக்கலாம். ஒருவர் குழந்தை கிறிஸ்மஸ் விழாவுக்குக் காத்திருப்பது போல் காத்திருக்கலாம். ஆனாலும் ஆவலோடே காத்திருத்தல் என்பது வேறொரு பொருளையும் தரலாம். ஆவலோடே என்பது நிச்சயம ற்றதாக என்று அர்த்தப்படலாம். ஆவலோடே என்பது பயத்தையும், அறிய முடியாத ஒரு பதட்டமுள்ள அச்சத்தையும் கொடுக்கக் கூடும். யூதா ஆவலோடே காத்திருக்கிறோம் என்று சொல்லும் போது அவர் முன்பு சொன்ன வார்த்தையைப் பொருள்படுத்துகிறது. கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் மறு* ***வருகைக்காக*** *ஆவலோடு காத்திருக்கிறார்கள், அவருடைய* ***வருகையைப்பற்றி*** *ஆவலோடே அல்ல.*

---

**குறிப்புகள்**

[1]The word occurs elsewhere in 1 Corinthians 2:14; 15:44, 46 and James 3:15. According to Walter Bauer, the word pertains "to the life of the natural world and whatever belongs to it, in contrast to the realm of experience whose central characteristic is [spirit]." (Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 3d ed., rev. and ed. Frederick William Danker [Chicago: University of Chicago Press, 2000], 1100.) [2]The word *aiōnios,* "eternal," is the adjective form of the noun that means "age" (*aiōn*). Thus "eternal" properly means "characteristic of the age to come." When a believer puts on Christ in baptism, he is heir to life that is somehow like the life to be experienced in the age to come.